உ
விநாயகர் துணை



# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## கேர்ணிங்,டென்மார்க்

## *குரோதி வருடப்பிறப்பு, சித்ரா பௌர்ணமி விஞ்ஞாபனம்*

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

சீரும் திருவும் பொலிந்து, சிவசீலர்கள் நிறைந்து, விளங்கும் புண்ணிய பூமியாகிய டென்மார்க் நாட்டின்கண்ணே கேர்ணிங் மாநகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் ஆலயத்தில் விநாயகப்பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் **புதுவருடப்பிறப்பு பூஜை 13-04-2024 அன்று சனிக்கிழமை மாலை 16.45 மணிக்கு குரோதி வருடம் பிறக்கும் வேளையில் இடம்பெறும்.** அத்தருணம் அடியார்கள் வருகைதந்து, தங்கள் வாழ்வு புத்தாண்டில் புதுப்பொலிவு பெறுவதற்கு எம்பெருமான் விநாயகரை உள்ளன்போடு வழிபாடு செய்து திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

- **புதுவருடப்பிறப்பு பூஜை 13-04-2024 சனிக்கிழமை**

***பிற்பகல்*** *அபிஷேகம் ஆரம்பமாகி எம்பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெற்று* வருடம் பிறக்கும் வேளையில் ***16.45 மணிக்கு பூஜை, வசந்தமண்டபப்பூஜை, பஞ்சமுகஅருச்சனை*** இடம்பெற்று *எம்பெருமான் உள்வீதியுலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும். நிறைவாக விபூதிப்பிரசாதம், அன்னதானம் வழங்கப்படும்.*

- ***சித்ரா பௌர்ணமி பூஜை 23-04-2024 செவ்வாய்க்கிழமை***

***முற்பகல்*** *அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெற்று அதனைத்தொடர்ந்து* ***11.00 மணிக்கு*** *பூஜை வசந்தமண்டபப்பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதியுலா வருதலும் இடம்பெறும். பகல் அன்னதானம் வழங்கப்படும்.*

**மாலை** ***19.00 மணிக்கு*** *வழமையான பூஜை நடைபெறும்.*

***குறிப்பு:*** *மெய்யடியார்கள் பூஜை அபிஷேகத்திரவியங்கள் வழங்கியும் அபிஷேக பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டும் எம்பெருமானின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.*

***குறிப்பு:*** *ஆலயத்தில் மருத்துநீர்* **வெள்ளிக்கிழமை** ***(12.04.2024) மாலை 17.00- 20.00*** *மணிவரையும் வழங்கப்படும்.*

*தொடர்புகளுக்கு: 97225511, 29253851*

www.pillayar.dk

இங்ஙனம்
பரிபாலனசபையினர்.